**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093808

1. District மாவட்டம் : கரூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 01/20 Date: நாள் 25.02.20

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 17.02.2020, 20.02.2020 24.02.2020
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.02.20 Time : நேரம் 18.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.02.20 Time : நேரம் 20.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 18 கி.மீ வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வேலாயுதம்பாளையம் காவல் நிலையம் கரூர் மாவட்டம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் சே.கி. அபிஷேக் மாறன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இளமாறன்
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 14/04/91 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் சுய தொழில் (g) Address : முகவரி 32/13-B பாக்கசாலி நகர், அன்னதானப்பட்டி, சேலம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) வேலுச்சாமி, காவல் ஆய்வாளர் 2) செந்தில்குமார், காவலர் (ரைட்டர்) வேலாயுதம்பாளையம், காவல் நிலையம், கரூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது.

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 25.02.2020 ஆம் தேதி 17.20 மணிக்கு நிலையத்தில் இருந்த போது சேலம், அன்னதானபட்டி, பாஞ்சாலி நகர், இளமாறன் மகன் அபிஷேக் மாறன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த, எழுத்து மூலமான புகாரை பெற்று கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் சே.இ.அபிஷேக் மாறன், த/பெ.இளமாறன், எண்.32/13B, பாஞ்சாலி நகர், அன்னதானபட்டி, சேலம். பெறுநர் உயர்திரு இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கரூர். அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஸ்ரீசுதர்சனம் ஏஜென்சி என்ற பெயரில் டேஸ்டி மசாலா நிறுவனத்தின் டீலராக சேலம் மாவட்டத்தில் தொழில் செய்து வருகிறேன். நான் சொந்தமாக இன்னோவா மற்றும் இட்டியாஸ் ஆகிய இரண்டு கார்கள் வைத்துள்ளேன். கடந்த 15.02.2020 ஆம் தேதி சேலம் ஓமலூர் பாத்திமா பள்ளியைச் சேர்ந்த எனது சித்தியின் நண்பர்களான நான்கு கன்னியாஸ்திரிகளை டிரைவர் ராஜசேகர் என்பவர் என்னுடைய TN 31 AF 0999

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. E. [signature] 25/02/2020

[signature] 25/02/20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

25.02.20 at 21.00 hrs.

Name: பெயர் ரெ.ருபா கீதாராணி
Rank: நிலை ....................No. எண் ..........

காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு.
கரூர்

**Continuation of Karur Vigilance and Anti-Corruption FIR in Cr.No. 01/2020.**

என்ற எண் கொண்ட இன்னோவா காரில் சேலத்திலிருந்து சிவகங்கை மாவட்டம், சருகனிக்கு அழைத்துச் சென்று ஒரு நபரை மட்டும் ஆரோக்கியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துவிட்டு, மறுநாள் 16.02.2020 ஆம் தேதி மூன்று கன்னியாஸ்திரிகளுடன் சேலம் நோக்கி வரும் போது மதியம் சுமார் 2.15 மணியளவில் கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் அருகே உள்ள கட்டிப்பாளையம் பிரிவு அருகே TN 59 S 5099 என்ற எண் கொண்ட மாருதி ஜென் காரின் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக எனது டிரைவரான ராஜசேகர் தகவல் சொன்னார். நான் உடனே சேலத்திலிருந்து புறப்பட்டு, வேலாயுதம்பாளையம் காவல் நிலையம் வந்து, டிரைவர் ராஜசேகரை சந்தித்தேன். அப்போது அவர் மீது வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில் எப்ஐஆர் நம்பர் 39/2020, சட்ட பிரிவு 279, 337 IPC-ன் படி வழக்கு பதிவு செய்துவிட்டதாக என்னிடம் கூறினார். நாங்கள் இருவரும் வேலாயுதம்பாளையம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வேலுச்சாமி அவர்களை சந்திக்க அவரது அறைக்கு சென்றோம். அப்போது அவர் வெளியில் காத்திருங்கள் என்று கூறினார். அதன்படி நாங்கள் வெளியில் காத்திருந்தோம். பின்பு இரவு சுமார் 8.30 மணிக்கு எஸ்.ஐ. திரு.அருள்செல்வன், மேலே சொன்ன விபத்தில் ஒரு பெண் இறந்துவிட்டதாகவும், என்னையும், டிரைவர் ராஜசேகரையும் வீட்டிற்கு சென்றுவிட்டு, மறுநாள் வருமாறு கூறினார். நாங்கள் இருவரும் புறப்பட்டு சேலத்திற்கு சென்றுவிட்டோம். மறுநாள் 17.02.2020 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்திற்கு வந்து எஸ்.ஐ திரு.அருள்செல்வனை சந்தித்தோம். அப்போது அவர் இன்ஸ்பெக்டர் வேலுச்சாமி அவர்களைத்தான் பார்க்க வேண்டும் என்றும், அதற்காக காத்திருக்குமாறும் கூறினார். நாங்கள் இருவரும் காவல் நிலையத்திலேயே காத்திருந்தோம். மதியம் சுமார் 2.30 மணிக்கு இன்ஸ்பெக்டர் வேலுச்சாமி அலுவலகத்திற்கு வந்தார். நானும் டிரைவரும் அவரை சந்தித்தோம். அப்போது அவர் ரூ.10,000/- வேண்டும் என்றும், வாகனம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை கொண்டு வந்து, ரைட்டர் செந்தில்குமாரிடம் கொடுக்குமாறும் கூறினார். அதற்கு நாங்கள் சார் இந்த பணம் அரசுக்கு கட்டவேண்டிய பணமா என்று கேட்டோம். அதற்கு அவர் என்னப்பா விபரம் தெரியாத ஆளாக இருக்கீறீர்கள். உங்களுடைய இன்னோவா காரை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்புவதற்காக எனக்கு கொடுக்க வேண்டிய பணம் என்று கூறினார். மேலும் ஆய்வாளர் கூறியது போல் நானும், டிரைவர் ராஜசேகரும் ரைட்டர் செந்தில்குமாரை சந்தித்து வாகனத்தின் ஆவணங்களான 1) பதிவு சான்று, 2) காப்பீட்டு சான்று மற்றும் ஓட்டுநரின் ஆவணங்களான 3) ஓட்டுநர் உரிமம், 4) ஆதார் அட்டை, 5) வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களை கொடுத்தோம். அப்போது ரைட்டர் செந்தில்குமார் ரூ.5,000/- பணம் வேண்டும் என்று கேட்டார். நான் அதற்கு சார் இந்த பணத்திற்கு ரசீது கொடுப்பீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர் ரசீதெல்லாம் கொடுக்க முடியாது, உங்களுடைய காரை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்புவதற்கு நான் ஏற்பாடு செய்வதற்கு, எனக்கு கொடுக்க

வேண்டிய பணம் என்று கூறினார். பணத்தை ஏற்பாடு செய்துவிட்டு வருவதாக கூறிவிட்டு, நாங்கள் இருவரும் சேலம் சென்றுவிட்டோம். பின்பு 20.02.2020 ஆம் தேதி நான் வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்திற்கு சுமார் 11.00 மணிக்கு சென்று இன்ஸ்பெக்டர் வேலுச்சாமி அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் நான் கேட்ட பணம் கொண்டுவந்திருக்கிறாயா என்று கேட்டார். நான் அவ்வளவு பணம் என்னால் புரட்ட முடியவில்லை, தயவு செய்து கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.10,000/- பணம் வேண்டும் என்று கறாராக கூறினார். சார் நான் பணத்தை புரட்டிக் கொண்டு வருவதற்கு சிறிது கால அவகாசம் வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் சரி என்றும் 24.02.2020 ஆம் தேதி திங்கள் கிழமை காலை வரும்படியும், பணம் தராவிட்டால் நீ அலைந்து கொண்டு இருக்க வேண்டியதுதான் என்று கூறினார். பின்பு ரைட்டர் செந்தில்குமாரை சந்தித்தேன். அப்போது ரைட்டர் செந்தில்குமார், நான் கேட்ட பணம் கொண்டு வந்திருக்கிறாயா என்று கேட்டார். அப்போது நான் இன்ஸ்பெக்டருக்கும் கொடுக்க வேண்டியுள்ளது, உங்களுக்கும் கொடுக்க வேண்டியுள்ளது, அவ்வளவு பணம் என்னால் புரட்டமுடியவில்லை, தயவு செய்து குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.5,000/- பணம் வேண்டும் என்று கண்டிப்பாக கூறினார். சரி பணத்தை ஏற்பாடு செய்து வருகிறேன் என்று கூறிவிட்டு, சேலத்திற்கு சென்றுவிட்டேன். பின்பு நான் மூன்று நாட்கள் பணம் புரட்ட முயற்சி செய்தும் என்னால் முடியவில்லை, ஆகையால் 24.02.2020-ம் தேதி டிரைவர் ராஜசேகரை அழைத்துக்கொண்டு மதியம் சுமார் 12.00 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு காவல் ஆய்வாளர் இல்லை. எனவே ரைட்டர் செந்தில்குமாரை சந்தித்தேன். அப்போது அவர் நான் கேட்ட பணம் கொண்டுவந்திருக்கிறாயா என்று கேட்டார். நான் அதற்கு சார் மிகவும் சிரமமாக உள்ளது. தயவுசெய்து குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ஒரு ரூபாயைக் கூட குறைக்க முடியாது ரூ.5,000/- கண்டிப்பாக வேண்டும் என்று கூறினார். மேலும் இன்ஸ்பெக்டர் இரண்டு நாள் பயிற்சிக்காக வெளியூர் சென்றுள்ளதாகவும், அதனால் பணத்துடன் 26.02.2020-ம் தேதி காலை காவல் நிலையத்திற்கு வர வேண்டும் என்றும் கூறினார். வீட்டிற்கு சென்ற பிறகு நான் யோசனை செய்து பார்த்ததில் இன்ஸ்பெக்டருக்கும் ரைட்டருக்கும் அவர்கள் கடமையை செய்வதற்கு எதற்கு பணம் கொடுக்க வேண்டும் என தோன்றியது. எனவே என்னிடம் லஞ்சம் கேட்கும் வேலாயுதம்பாளையம் இன்ஸ்பெக்டர் வேலுச்சாமி மற்றும் ரைட்டர் செந்தில்குமார் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் வேலாயுதம்பாளையம் இன்ஸ்பெக்டர் வேலுச்சாமி மற்றும் ரைட்டர் செந்தில்குமார் ஆகியோர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/- கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு Sd/- S.E.Abishek Maran 25.02.2020. Sir, Received the complaint on 25.02.2020 at 18.30 hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, DVAC, Chennai. I am

registering a case in Karur V&AC Cr.No.01/2020, u/s. 7(a) of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 on 25.02.2020 at 20.15 hrs and took up investigation Sd/- J.Rupageetharani, 25.02.2020, (J.Rupageetharani) Inspector of Police, V&AC, Karur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் திரு. சே.இ.அபிஷேக் மாறன் அவர்களின் அசல் புகார் மனு ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், கரூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

J R 25/02/20

(ஜெ.ருபாகீதாரா்ணி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கரூர்
25.02.2020.